# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● செப்டம்பர் 24 2022

Weekly E-paper ● September 24, 2022





# தினகரனைப் பரப்புங்கள்

சுப.வீரபாண்டியன்

## “நான் ரெடி! நீங்க ரெடியா?” - ஆ.ராசா !

மதிவாணன்

## பா.ஜ.க ஆட்சியைத் துடைத்தெறிவோம்!

தலையங்கம்

## தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கும் பா.ஜ.க.

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● செப்டம்பர் 24 2022 Weekly E-paper ● September 24, 2022


# தினகரனைப் பரப்புங்கள்

**சுப.வீரபாண்டியன்**



சென்னையிலிருந்து கோவைக்குச் செல்லும் சதாப்தி எக்ஸ்பிரஸ் காலை 7 மணிக்குப் புறப்படுகிறது. அந்தத் தொடர் வண்டியில் பயணிகள் வருவதற்கு முன்பே எல்லோருடைய இருக்கைகளிலும் தினமலர் நாளேடு இருப்பதைப் பார்க்க முடிந்தது.

எல்லோரும் கட்டாயம் தினமலர் படித்துத்தான் ஆக வேண்டுமா என்ன? அவரவர் விருப்பப்படி என்ன நாளேடு வேண்டும் என்று கேட்டுக் கொடுக்கலாம். அல்லது பல நாளேடுகளையும் தொடர்வண்டியில் ஒரு பகுதியில் வைத்து விட்டு, வேண்டியதை அவரவர் எடுத்துக் கொள்ள வழி செய்யலாம்.

எந்த விருப்பத்திற்கும் இடமில்லாமல் எல்லோரிடமும் தினமலரைக் கொண்டு வந்து திணிப்பது என்ன நியாயம்? யாருடையப் பணத்தில் தினமலர் வாங்கப்படுகிறது? நம் பயணச் சீட்டுக்கு நாம் கொடுக்கும் பணத்தில்தான் வாங்கப்படுகிறது என்றால், அது நம் உரிமையை மதிக்காத செயல். இல்லை, இல்லை அவர்கள் இலவசமாகக் கொடுக்கிறார்கள் என்றால், இலவசமாகக் கொடுக்கப்படும் எல்லா இதழ்களையும் மக்களுக்குத் தொடர்வண்டித் துறை வாங்கிக் கொடுக்குமா?

முரசொலி, விடுதலை, தீக்கதிர் போன்ற நாளேடுகளை நாமும் வாங்கிக் கொடுக்கலாம். சிறுவயதிலிருந்தே நான் முரசொலியும் விடுதலையும் படித்து வளர்ந்தவன். இன்றைக்கும் அன்றாடம் அந்த ஏடுகளைப் படிக்கிறேன்.

எனினும் அவற்றை மக்களிடம் கொடுத்தால் அவை கட்சிப் பத்திரிகைகள் என்று கருதுகின்றனர். தினமலர் மட்டுமென்ன நடுநிலை நாளேடா? அப்படி ஒரு வேடம், பாசாங்கு!

இப்போது எனக்கு ஒரு கருத்துத் தோன்றுகிறது. முரசொலி போன்ற ஏடுகள் கட்சி ஏடுகள்தாம். எனவே அவற்றை விட்டுவிடலாம். தினகரன் நாளேடு தினமலர் மாதிரியே நடுநிலை நாளேடு என்று வைத்துக் கொள்ளலாம். தொடர் வண்டித் துறை தினமலரை மக்களுக்கு வாங்கிக் கொடுக்குமானால், ஏன் தமிழக அரசு தமிழ்நாடு அரசுப் பேருந்துகள் அனைத்திலும் தினகரனை இலவசமாக வாங்கிக் கொடுக்கக் கூடாது?

அரசு மட்டுமில்லை நாமும் கூட நம் வீட்டிற்கு அருகில் உள்ள படிப்பகம் முடி திருத்தகம் போன்றவைகளில் தினகரன் ஏட்டினை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

இப்படி எல்லாம் நான் எழுதுவது, தினகரன் ஏட்டின் விற்பனையைப் பெருக்குவதற்காக இல்லை. தினகரன் நாளேட்டின் ஆசிரியர் குழு யார் என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் முரசொலி, விடுதலையைப் போல தினகரனைக் கட்சிப் பத்திரிகை என்று சொல்லிவிட முடியாது. பொதுவான செய்திகளும் அதில் நிறைய இருக்கின்றன. மக்கள் அதையும் நடுநிலை ஏடு என்றுதான் கருதுவார்கள்.

இன்றையச் சூழலில் நமக்குப் பொதுவான பல ஊடகங்கள் தேவைப்படுகின்றன. நடுநிலை போலப் பாசாங்கு செய்யும் தினமலர் நாளேடு, சாணக்கியா வலையொளி போன்றவைகள் எல்லாம் பொதுவான ஊடகங்களாகத்தானே தம்மைக் காட்டிக் கொள்கின்றன. அப்படிக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை கட்டாயம் நமக்கும் இருக்கிறது.

எனவே நம் தோழர்கள் இதனை ஒரு வேலையாக எடுத்துச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறேன். மாற்று வழிகளைச் சிந்திக்க வேண்டிய தருணத்திலும் கட்டாயத்திலும் இப்போது நாம் இருக்கிறோம்! ●



# “நான் ரெடி! நீங்க ரெடியா?” – ஆ.ராசா !

மதிவாணன்

நீ இந்துவாக இருக்கும் வரை சூத்திரன் என்றும், மனுஸ்மிருதியில் 8ஆம்அத்தியாயம், 415 ஆம் ஸ்லோகத்தில் குறிப்பிட்டுள்ள சூத்திரர்க்கான வரையறையப் படிநிலையில் தேவடியாள் மகன் என்று இருப்பதைச் சுட்டிக்காட்டி ஆ.ராசா அவர்கள் பேசியதை பா.ஜ.க திரித்து விவாதமாக மாற்றி விட்டது.

அரசியல் அமைப்புச் சட்டம் வந்த பிறகு எங்கே இருக்கிறது மனுநீதி என்றும், யார் பின்பற்றுகிறார்கள் மனுநீதியை என்றும் கூசாமல் பேசுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதாக உறுதி ஏற்ற ஆளுநர் ஆர்.என்.இரவி மனுஸ்மிருதியை உயர்த்திப்பிடிக்கும் சனாதனத்தை ஏற்றுப் பேசுகிறாரே. இது குறித்து ஒருவரும் பதில் கூறுவதில்லை.

நாராயணன் மற்றும் கேசவன் ஆகிய பார்ப்பனர்கள், ஆண்டாள் குறித்து ஆய்வுக்கட்டுரை எழுதியதற்காக கவிஞர் வைரமுத்துவை வசைபாடினார்கள். மன்னிப்புக்கேள் என்றார்கள். அதுபோலவே சுகி.சிவம் பேசியதையும் பிடித்துக் கொண்டார்கள்.

இங்கு கவனிக்கத் தக்கது என்னவென்றால் எது பேசினால் சிக்கலாகும் என்பதல்ல, யார் பேசினால் சிக்கலாகும் என்பதே முக்கியம் பெறுகிறது.

சனநாயக நாட்டில் பேச்சுக்குத் தடையில்லை. தத்தம் கருத்தை யார் வேண்டுமானாலும் கூறலாம்.

ஆனால் அதற்கு ஒரு தகுதி வேண்டும், அவாள் கருத்துக்கு உட்பட்டு வேண்டுமானால் பேசலாம், அதை மீறி உங்களுக்கு என்று ஒரு சுயக்கருத்து இருக்கக் கூடாது என்று சொல்வது பாசிசம். ஒரு குலத்துக்கு ஒரு நீதி, பார்ப்பானுக்கு ஒரு நீதி- சூத்திரனுக்கு ஒரு நீதி என்பதுதானே மனுஸ்மிருதி. இன்றும் அனைத்துச் சாதிகள் அர்ச்சகர் ஆகலாம் என்றச் சட்டத்தை ஏன் எதிர்கின்றனர்? பின்னால் இருக்கிறது மனுவின் நீதி .

யார் சூத்திரன் என்று சந்தேகம் உள்ளவர்களுக்கு, சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியார், தன் தெய்வத்தின் குரல் நூலின் இரண்டாம் பாகத்தில் நவீனர்களின் கருத்து என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு கூறுகிறார், “ப்ராமண வர்ணத்திலேயே ஐயர், ஐயங்கார், ராவ் என்று பல ஜாதிகள் இருக்கின்றன. நாலாம் வர்ணம் ஒன்றிலேயே முதலியார், பிள்ளை, ரெட்டி, நாயக்கர், நாயுடு, கவுண்டர், படையாட்சி என்கிற மாதிரி எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன”. இன்றைய அளவிலும் இணையத்தில் இருக்கின்றது. (பார்க்க: *https://www.kamakoti.org/tamil/2dk67.htm*)

ஆ.ராசா அவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டுமாம்! கேட்கத் தயார். என்ன மன்னிப்பு என்று சொல்லுங்கள் என்று நெத்தியடியாகக் கேட்கிறார் ஆ.ராசா. வெளிப்படையாக ஒரு சனாதனவாதிக்கும் பதில் கூறத் திராணியில்லை. பதிலை உரக்கச் சொல்லிவிட்டால் அது அவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகிவிடும். நீதிமன்றம் செல்வோம் என்று அச்சுறுத்தினார்கள்; அதற்காகத்தான் காத்து இருக்கிறேன் என்று ராசா சொன்னவுடன் ஆடிப்போனார்கள் ஆட்டம் ஆடியவர்கள். ஏன்? மனுவின் நீதிக்குட்டு வெளிப்பட்டுவிடும் என்பதால்தான்.

இந்தியாவின் பிற பகுதிகளில் செய்யும் காவிகளின் அரசியல், தமிழ்நாட்டில் எடுபடாது. காரணம் இங்குள்ள தமிழர்கள் படித்தவர்கள், நடப்பது திராவிட மாடல் ஆட்சி.

2024ஆம் ஆண்டு வரவிருக்கும் ஒன்றிய அரசுக்கான பொதுத்தேர்தலில் எப்படிக் களம் அமைப்பது என்று அல்லாடும் பா.ஜ.க அண்ணாமலைக்கு நேர்மையான அரசியல் தெரியாமல் இப்படிக் குறுக்குச் சால் ஓட்டுகிறார்.

அண்ணாமலை நேர்மையான மனிதராக, அரசியல்வாதியாக இருப்பாரேயானால் அவர் சொல்ல வேண்டியது ஒன்றுதான்.

ஆ.ராசா அவர்கள் சொன்னது போலச் சூத்திரர்களை, மனுஸ்மிருதி கேவலமாகப் பேசுகிறதா இல்லையா? ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். அல்லது நீதி மன்றத்திற்காவது வரவேண்டும்.

என்ன செய்யப் போகிறார் அண்ணாமலை? பார்ப்போம்.! ●


உ
கடவுள் துணை.
மநுதரும சாஸ்திரம்
இஃது
வடமொழியிலிருப்பதால் ஸம்ஸ்கிருதபாஷையில்
வல்லவர்களாகிய சிலர்க்கேயன்றி மற்றையோர்க்கு
உபயோகப்படாமையால்
யாவருக்குமுபயோகமாகும்பொருட்டு
திருவைக்கிழகம் - கோமாண்டூர் - இளையவில்லி
இராமாநுஜாசாரியரை
புதுவை.
நா - முத்துரங்கசெட்டியார்
கேட்டுக்கொண்டபடி
அவர் தமிழில் மொழிபெயர்த்து வசனரூபமாகச்செய்த தருமநூலை
ஷையார் சகோதரராகிய
முத்துக்கோவிந்த செட்டியார்
பு - க - சுப்பராய முதலியாரால்
பிழையறத்திருத்துவித்த சுத்த பிரதிக்கிணங்க
சென்னை
ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
இதன் விலை] 1919 [ரூபா 2½



“சூத்திரன் என்றால் மனுஸ்மிருதியில் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை’ யுத்தத்தில் ஜெயித்து அடிமையாக்கப்பட்டவன்’ அடிமைத் தொழிலுக்காக ஒருவனால் மற்றொருவனுக்குக் கொடுக்கப்பட்டவன்’ வைப்பாட்டியின் மகன்’ முதலிய ஏழுவித மக்களுக்கு சூத்திரர்கள் என மனுதர்ம சாஸ்திரத்தில் பெயரிடப்பட்டிருக்கிறது”

(குடிஅரசு, சொற்பொழிவுகள்: 07-06-1925, 21-06-1925, 08-06-1925)

பெரியார் களஞ்சியம், குடி அரசு, தொகுதி - 1



# படம் சொல்லும் பாடம்







सहाऽऽसनमभिप्रेप्सुरुत्कृष्टस्यापकृष्टजः ।
कट्यां कृताङ्को निर्वास्यः स्फिचं वाऽस्यावकर्तयेत् ॥

ஸஹா ஆஸநமபிப்ரேப்சுருத் க்ருஷ்டஸ்யா அபக்ருஷ்டஜ: |
கட்யாம் க்ருதாங்கோ நிர்வாஸ்ய: ஸ்பிசம் வாஅஸ்யாஅவ கர்தயேத் | 281

சூத்திரன் அகங்காரத்தால் பிராம்மணனுடன் சமமான ஆசனத்தில் உட்கார்ந்தால் இடுப்பின் பின்புறத்தில் சூடு போட வேண்டும்.

மனு ஸ்மிருதி
அத்தியாயம் 8 ஸ்லோகம் 281

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பா.ஜ.க ஆட்சியைத் துடைத்தெறிவோம்!

தலைவர் கலைஞர் எட்டடி பாய்ந்தால், அவரின் மகன் ஸ்டாலின் பதினாறடி பாய்கிறார். இது புலிப் பாய்ச்சல், ஆடுகளை அரண்டோட வைக்கும் பாய்ச்சல்.

மக்களுக்காக, மக்களின் நலனுக்காக, மக்கள் நலத் திட்டங்களுக்காக, அத்திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைவதற்காக, ஓய்வு ஒழிச்சலின்றி பணியாற்றிக் கொண்டிருக்கிறார் 'திராவிட மாடல்' முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

மக்கள் செல்வாக்குக் கூடுகிறது, ஒன்றியத்தின் மாநிலங்கள், உலக நாடுகள் வரையும் புகழின் உச்சிக்கே சென்று விட்டார் அவர். அதனால் ஒரே நாடாகவும், ஒரே மொழியாகவும் ஆக்கி, இந்நாட்டைப் பார்ப்பன நாடாக மாற்றப் பார்க்கும் காவிகளுக்குப் பெரும் சவாலாக, சீனப் பெருஞ்சுவர் போலத் தடையாக எழுந்து நிற்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

நேர்மையான அரசியலால் இங்கு காலூன்ற முடியாத ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க காவிகள், மாநிலத்தில் அமைதியற்றச் சூழலை உருவாக்க, மதத்தைக் கையில் எடுத்துள்ளனர்.

உண்மைகளைப் புறந்தள்ளி பொய்களையும், திரிபு பேச்சுகளையும் பேசி வன்முறைக்கு வழிகோலுவதாகத் தெரிகிறது.

“உனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை, உனது சமூகத்திற்குக் கொடுக்கப்பட்ட வேலையை, உனது ஜாதிக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய் என்பதுதான் தர்மம், மனுதர்மம்” என்று அண்ணாமலை பேசுகின்ற வீடியோ ஒன்று சமூக ஊடகங்களில் வலம் வருகிறது. இதுதான் ராமராஜ்யம்.

மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டச் செய்தியைச் சொன்னால், அதைத் திரித்துப் பேசிப் பதற்றத்தை உருவாக்கி வருவது நல்லதற்கல்ல.

சாதி, மத அரசியல் என்றுமே மக்களைப் பிளவுபடுத்தும். அப்படிப்பட்ட அரசியல் அமைப்புகளை மக்கள் ஒதுக்கித் தள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் அடுத்து வரவிருக்கும் ஒன்றியப் பொதுத் தேர்தலில் பா.ஜ.கவை முற்றாகத் துடைத்தெறிய வேண்டும் மக்கள்.

மக்களுக்குத் தோள் கொடுக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் கருத்தொற்றுமையில் ஒன்றிணைந்து, மாச்சரியங்களை ஒதுக்கிவிட்டு, ஓரணியில் நின்று பா.ஜ.கவை வீழ்த்த முன்வரவேண்டும், காலம் தாழ்த்தாமல்.

தமிழ்நாட்டில் ‘சூரிய ‘ வெப்பத்தால் ‘தாமரை’ வாடும், வதங்கும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கும் பா.ஜ.க.

**சாரதா தேவி**

சற்றொப்பப் பத்து ஆண்டுகளாக, தமிழ்நாட்டின் பெரிய அரசியல் ஆளுமைகளான கலைஞரும், ஜெயலலிதாவும் உடல் நலிவுற்ற நிலையையும், அவர்களின் மறைவையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கட்சி வளர்க்கக் காத்திருந்தனர் இந்துத்துவவாதிகள் பா.ஜ.கவினர்! அவர்கள் நினைத்தபடியே ஊழலில் திளைத்த அடிமைகள் கூட்டமாம் அ.தி.மு.க.வினர் பா.ஜ.க வலையில் விழுந்தனர். அவர்களை வைத்து ஆட்சி, அதிகார மட்டங்களில் சாதிய மதவாத ஆட்களை ஊடுருவச் செய்த பின்னர், திட்டமிட்டபடி அந்தக் கட்சியை உருக்குலைத்தனர் காவிகள். கடந்த தேர்தலில் தி.மு.க.வின் வெற்றியை முடிந்த அளவு தடுக்கப் போராடி, தளபதியின் உழைப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோற்றுப்போயினர் அந்த மதவாதக் கூட்டத்தினர்.

எதிர்க் கட்சி என்ற நிலை கூட அ.தி.மு.க. வுக்கு மறந்துவிடும் அளவு அவர்களுடைய முகங்களை, அவர்களுடைய பேச்சுகளை, அவர்களுடைய எழுத்துகளை, அவர்களுடையப் பதிவுகளை எதிர்மறையாக இடம்பெறும் வண்ணம் எல்லா எழுத்து மற்றும் காட்சி ஊடகங்களையும் வளைத்துப் போட்டனர். இன்றளவும் சமூக வலைத்தளங்கள் இல்லாவிடில், அவர்களுடையத் தகிடுதத்தங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எந்த அமைப்புக்கும் சவாலான செய்தியே!

கட்சி வளர்ப்புக்கும், சித்தாந்தத் தொடர்ச்சிக்கும் கலவரங்களையும், வெறுப்பு அரசியலையும் நம்பி இருக்கும் வரலாற்றுப் பெருமை பா.ஜ.க மதவாதச் சக்திகளிடம் உண்டு! அதன்படியே மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்றது முதல், கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தத் துடித்தார்கள்! ஆனால் தி.மு.க. ஆட்சியைக் குறை சொல்லக் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் தோல்வியைப் பிரகடனப்படுத்துவதாக முடிந்து விடுகின்றது.

எதைச் செய்வது எனக் கையைப் பிசைகிறார் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலை! ஆ.ராசா வின் பேச்சுக்கு காவல்துறையில் வழக்குகள் போட்டது, ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது, கடையடைப்பு நடத்தியது, மிரட்டல் விடுத்தது, கைதானது என ஒரு பரபரப்பு அடங்குவதற்கு உள்ளாகவே இதோ, அக்டோபர் 2 அன்று தமிழ்நாட்டில் 51 இடங்களில் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். அன்று காந்தி ஜெயந்தி. அதற்கும், ஆர்.எஸ்.எஸ்க்கும் என்னத் தொடர்பு?! பா.ஜ.கவினர் ஊர்வலத்திற்கு அனுமதி வாங்கச் சொல்லி இருக்கும் காரணங்கள், இந்திய சுதந்திரதின 75ஆம் ஆண்டு, அம்பேத்கரின் பிறந்ததின நூற்றாண்டு, விஜய தசமி ஆகியவையே!

இது வெளிக் காரணங்கள்! காந்தியாரின் பிறந்த நாளைத் தன்வயப்படுத்தி, அதை மக்கள் மனதிலிருந்து அப்புறப்படுத்தலும், அந்த நாளையும் பா.ஜ.கவினருக்கானதாக மாற்றுதலும்தான் அவர்களின் நோக்கம். அப்படித்தானே ரத ஊர்வலம் நடத்தினார்கள்? டிசம்பர் 6, அம்பேத்கரின் நினைவு நாளை மறைத்து, பாபர் மசூதி இடிப்பு நாளாக ஆக்கினார்கள்.

ஆர்.எஸ்.எஸ் ஊர்வலம் நடத்தினால் கம்பும் கையுமாகத்தான் போவார்கள். காந்தி பிறந்தநாளில் கம்புகளை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள்? கம்புகள் வேறெவர் கையிலும் இருப்பதைக் காட்டிலும் ஆர்.எஸ்.எஸ். கைகளில் இருப்பதை நாம் ஆபத்தானதாகத்தான் பார்க்க முடியும்.

அமைதியில் வாழும் தமிழகத்தை இந்துத்துவவாதிகள் கலவர பூமியாக மாற்ற எண்ணுவதைப் பார்வையாளராகக் கடக்க இயலாது.

அமைதியான தமிழகம் அமைதியாகவே இருக்கட்டும்; காவியும், கம்பும் இங்கு வேண்டாம்!

●

## பெரியார் பிறந்த நாள் நிகழ்வுகளில் சில

கோவை



சென்னை



மதுரை




ஈரோடு




Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian